# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# அதிகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்றல்

## புரோ ஷொப் அட்வெர்டைசிங் ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி

மற்றும்

## கங்கானம் ஆராச்சிகே சுரேஸ் மதுஷங்க

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட விசாரணையொன்றைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கி

i. அங்குணகொலபெலஸ்ஸ, ஆச்சார்யகம, இல.283 இல் பதிவுசெய்யப்பட்ட புரோ ஷொப் அட்வெர்டைசிங் ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி (PV 00237690); அத்துடன்

ii. அங்குணகொலபெலஸ்ஸ, ஆச்சார்யகம, இல. 283 இல் வசிக்கும் திரு. கங்கானம் ஆராச்சிகே சுரேஸ் மதுஷங்க (920694152V)

சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக வைப்புக்களை ஏற்றுள்ளனர் என 2023.09.06 ஆம் திகதியன்று தீர்மானித்துள்ளது என்பதனைப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக சொல்லப்பட்ட சட்டத்தின் 42 (10)ஆம் பிரிவின் கீழ் பொதுமக்களின் நலனுக்காக இவ்வறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, விளம்பரப்படுத்தல் பொதிகளை விற்பனைசெய்வதன் வாயிலாக அல்லது ஏதேனும் வேறு விதத்தில் மேலும் வைப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என மேற்குறித்த கம்பனியையும் தனிப்பட்டவரையும் இலங்கை மத்திய வங்கி பணித்துள்ளது.

மேற்குறித்த கம்பனி மற்றும் தனிப்பட்டவர் ஏதேனும் வடிவத்தில் வைப்புக்களை அல்லது நிதியங்களை கோருதல் மற்றும் திரட்டுதல், சொத்துக்களை கையுதிர்த்தல்/பாராதீனப்படுத்தல், ஏதேனும் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பில் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களைக் கைச்சாத்திடல் என்பவற்றைத் தடைசெய்கின்ற தடைக்கட்டளையை இலங்கை மத்திய வங்கி வழங்கியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01

011-2477504, 011-2398862 @ dsnbfi@cbsl.lk http://www.cbsl.gov.lk